# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1959 - 2016 මාර්තු මස 18 වැනි සිකුරාදා - 2016.03.18

*1959 ஆம் இலக்கம் – 2016 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 18 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (IIஆ) – விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | 426 | உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள் | 429 |
| கேள்விப்பத்திர முடிவுகள் பற்றிய அறிவித்தல்கள் | - | அந்நிய குடிவகை உத்தரவுச்சீட்டு விண்ணப்பங்கள் | - |
| பொருட்கள் விற்பனவும் பிறவும் | 426 | ஏல விற்பனைகள் | 431 |
| ஆய விற்பனையும் குத்தகையும் | - | நானாவித அறிவித்தல்கள் | - |


### வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான

### முக்கிய அறிவித்தல்கள்

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.*

*வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை* ***வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.*** *இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.*

*வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு* ***இரண்டு வாரங்களுக்கு முன்னர்,*** *அதாவது 2016, ஏப்பிறல் மாதம் 08 ஆந் திகதி வியாழக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2016, மாச்சு மாதம் 24 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.*

***2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு***

*“ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்.”*

**டபிள்யூ. ஏ. ஏ. ஜீ. பொன்சேக்கா,**
*அரசாங்க அழுத்தகர் (பதில்).*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2016 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01ஆந் திகதி.*
*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

# கேள்விப்பத்திர அறிவித்தல்கள்

**இலங்கைப் புகையிரத சேவைகள்**

பெறுகை அறிவித்தல்

## PROCURMENT OF 02 M/T OF INGOT TIN ( BLOCK TIN) TO SRILANKA RAILWAYS - PRO CUREMENT No. SRS/ F. 7288

இலங்கை புகையிரத சேவைகளுக்கு 02 M/T INGOT TIN ( BLOCK TIN) கொள்வனவு செய்வதற்காக உற்பத்தியாளர்கள்/ வழங்குநர்களிடமிருந்து இலங்கை, கொழும்பு 10, ஒல்கட் மாவத்தை, இலங்கைப் புகையிரத சேவைகள், புகையிரத தலைமையகம், திணைக்கள பெறுகைக் குழுவின் தலைவர், அரக்கு முத்திரையிடப்பட்ட விலைமனுக்களைப் பெற்றுக்கொள்வார்.

உற்பத்தியாளர்கள் அவர்களது விலைமனுக்களை அற்றோணித் தத்துவ முடைய தர அங்கீகாரம் பெற்ற முகவரூடாக அல்லது நேராகவும் அனுப்பலாம்.

2. விலைமனுக்கள் 2016.04.19 ஆந் திகதி பி. ப. 2.00 மணிக்கு (இலங்கை நேரம்) மூடப்படும்.

3. மீளளிக்கப்படாத ஆவணக் கட்டணமான 5,000 ரூபாவை மாத்திரம் அல்லது இலகுவில் மாற்றக்கூடிய நிகரான தொகையை வெளிநாடுகளிலுள்ள இலங்கைத் தூதுவராலயங்களில் 2016.04.18 ஆந் திகதி பி.ப. 3.00 மணி வரை செலுத்திய பின்னர் இலங்கையில் கொழும்பு 10, ஒல்கட் மாவத்தை, புகையிரத களஞ்சியசாலைகள் அத்தியட்சகரின் அலுவலகத்திலிருந்து பெற்றுக்கொள்ளக்கூடிய படிவங்களில் மாத்திரமே விலைமனுக்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

4. விலைமனுக்கள் அவைகளின் மூடும் நேரத்தின் பின்னர் உடனடியாகவே இலங்கை, கொழும்பு 10, ஒல்கட் மாவத்தை, இலங்கைப் புகையிரத சேவைகளின் பொது முகாமையாளரின் அலுவலகத்தில் திறக்கப்படும். விலைமனுக்களை திறக்கும் வேளையில் விலை மனுதாரர்கள் அல்லது அவர்களின் அங்கீகாரம் பெற்ற பிரதிநிதிகள் சமுகமளிக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

5. அரக்கு முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள் பதிவுத்தபாலில் அனுப்பப்படலாம் அல்லது நேரடியாகவே பின்வரும் முகவரியில் ஒப்படைக்கப்படலாம் :

தலைவர்,
திணைக்களப் பெறுகைக் குழு,
இலங்கைப் புகையிரத சேவைகள்,
புகையிரத தலைமையகம்,
ஒல்கட் மாவத்தை,
கொழும்பு 10, இலங்கை.

6. இலங்கை, கொழும்பு 10, ஒல்கொட் மாவத்தை, புகையிரத களஞ்சியங்கள் அத்தியட்சகரின் அலுவலகத்தில் விலைமனுக்கோரல் ஆவணங்களை இலவசமாகப் பரீட்சிக்கலாம்.

7. மேலதிக விபரங்களுக்கு.- தயவுசெய்து பின்வருபவருடன் தொடர்பு கொள்ளவும்.

புகையிரத களஞ்சியசாலைகள் அத்தியட்சகர்,
புகையிரத களஞ்சியசாலைகள் திணைக்களம்,
ஒல்கட் மாவத்தை, கொழும்பு 10, இலங்கை.

தொலைபேசி இலக்கங்கள் : 94(11) 2438078 அல்லது 94(11)2436818.
தொலைநகல் இல. : 94(11) 2432044.
மின்னஞ்சல் : srs.slr@gmail.com
இணையத்தளம் : www.railway.gov.lk

தவிசாளர்,
திணைக்களப் பெறுகைக் குழு (உயர் மட்டம்),
இலங்கைப் புகையிரத சேவைகள்.

குறிப்பீடு இல. SRS/F.7288

3-430

# பொருட்கள் விற்பனவும் பிறவும்

**மாவட்ட /நீதிவான் நீதிமன்றம் - வாழைச்சேனை**

வாழைச்சேனை நீதிவான் நீதிமன்றத்தினால் பறிமுதல் செய்யப்பட்டதும், இதுவரை உரிமை கோரப்படாததுமான பொருட்கள் ஏல விற்பனை

வாழைச்சேனை மாவட்ட/ நீதிவான் நீதிமன்றத்தில் பின்வரும் வழக்குகளில் பறிமுதல் செய்யப்பட்டதும், இதுவரை உரிமை கோரப்படாததுமான பின்வரும் பொருட்கள் 2016.04.02 ஆந் திகதி இந்நீதிமன்ற வளாகத்தில் வைத்து மு. ப. 9.00 மணிக்கு பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்.

2. யாராவது இங்கு குறிப்பிடப்பட்டுள்ள ஏதாவது பொருட்களின் உரிமை கோருமிடத்து விற்பனை நியமிக்கப்பட்ட தினத்தில் விற்பனை தொடங்குவதற்கு 1/ 2 (அரை) மணித்தியாலத்திற்கு முன்பு தமது கோரிக்கையை எழுத்து மூலமாக இந்நீதிமன்றத்தில் சமர்ப்பிக்க வேண்டும்.

3. பொது மக்கள் நீதிமன்றத்தின் பதிவாளரின் அனுமதியுடன் விற்பனைக்கு 1/2 (அரை) மணித்தியாலத்திற்கு முன்பு பொருட்களைப் பார்வையிடலாம்.

4. ஏல விற்பனையின்போது விற்பனை செய்யப்பட்ட பொருட்கள் பி.ப.4.00 மணிக்கு முன்னர் இந்நீதிமன்ற வளாகத்திலிருந்து அகற்றப்படுதல் வேண்டும்.

5. ஏல விற்பனையின்போது விற்பனைக்காக வைக்கப்பட்டுள்ள ஏதாவது பொருட்களில் மதிப்பிடப்பட்ட விலை கிடைக்காதவிடத்து அப்பொருட்களின் ஏல விற்பனையை மீளப்பெறும் உரிமையை மன்று தன்னகத்தே வைத்திருக்கும்.

6. எல்லாக் கொடுப்பனவும் காசாகவே செலுத்தப்பட வேண்டும். காசோலைகள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

7. ஏல விற்பனையில் கலந்துகொள்ள விரும்புகின்றவர்கள் கட்டாயமாக தனது தேசியஅடையாள அட்டையுடன் சமுகமளிக்க வேண்டும்.

8. ஏல விற்பனை தொடர்பில் ஏதாவது முறைப்பாடுகள் இருப்பின் குறித்த தினம் ஏல விற்பனை நடவடிக்கைகள் முடிவடைவதற்கு முன்னர் நீதிமன்றத்திற்கு அறியப்படுத்த வேண்டும். பின்னர் மேற்கொள்ளப்படும் எம்முறைப்பாடும் பரிசீலிக்கப்பட மாட்டாது.

ஜனாப் ஏ. சி. றிஸ்வான் ,
நீதிபதி/ நீதிவான்.

மாவட்ட/நீதிவான் நீதிமன்றம்,
வாழைச்சேனை.

2016, மாச்சு 01.

**அட்டவணை**

| | வழக்கு இல. | சான்றுப் பொருட்கள் தொடர்பான விபரம் | எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1. | B/175/08 | மோட்டார் சைக்கிள் இயந்திர இல. 04M08M45671 அடிச்சட்ட இல. 04M09 45236 | 01 |
| 2. | B/137/08 | மோட்டார் சைக்கிள் இயந்திர இல. 04K08M49830 அடிச்சட்ட இல. 04K09C 49434 | 01 |
| 3. | 20096/MT | மோட்டார் சைக்கிள் இயந்திர இல. 0F1B4114418S அடிச்சட்ட இல. MD625AF1741B63207 | 01 |
| 4. | 17951/ PC | மோட்டார் சைக்கிள் இயந்திர இல. : GJS1008778 அடிச்சட்ட இல. GJS1008945 | 01 |
| 5. | 17777/PC | மோட்டார் சைக்கிள் இயந்திர இல. 03H27E28521 அடிச்சட்ட இல. 03H27F33084 | 01 |
| 6. | B/ 248/09 | மோட்டார் சைக்கிள் இயந்திர இல. : DHGBJJ92800 அடிச்சட்ட இல. (DHVBJJ92774 | 01 |
| 7. | 18508/MT | மோட்டார் சைக்கிள் இயந்திர இல. 04K15M-36328 அடிச்சட்ட இல. 04K16C36572 | 01 |
| 8. | 16911/ PC | மோட்டார் சைக்கிள் இயந்திர இல. 05F27E15195 அடிச்சட்ட இல. 05F27E16351 | 01 |
| 9. | B/388/11 | மோட்டார் சைக்கிள் இயந்திர இல. JKMBTA72657 அடிச்சட்ட இல. MD2DDJK22TWA 74115 | 01 01 |
| 10. | AR/41/14 | மோட்டார் சைக்கிள் (பதிவுசெய்ய முடியாதது) | 01 |
| 11. | 16910/14/PC | மோட்டார் சைக்கிள் (பதிவுசெய்ய முடியாதது) | 01 |
| 12. | 11127/PC | மோட்டார் சைக்கிள் (பதிவுசெய்ய முடியாதது) | 01 |
| 13. | 18779/PC | கையுழவு இயந்திரம் (பதிவுசெய்ய முடியாதது) | 01 |
| 14. | 24478/PC | கையுழவு இயந்திரம் (பதிவுசெய்ய முடியாதது) | 01 |
| 15. | 26529/PC | 1. உழவு இயந்திர இழுவைப் பெட்டி (பதிவுசெய்ய முடியாதது) | 01 |
| | | 2. உழவு இயந்திரஇழுவைப் பெட்டி (பதிவுசெய்ய முடியாதது) | 01 |
| 16. | 11960/PC | உழவு இயந்திரஇழுவைப் பெட்டி (பதிவுசெய்ய முடியாதது) | 01 |
| 17. | B/598/09 | உழவு இயந்திரஇழுவைப் பெட்டி (பதிவுசெய்ய முடியாதது) | 01 |
| 18. | 26645/F | தோணி | 01 |
| 19. | AR/244/14 | வண்டில் | 01 |
| 20. | AR/330/13 | வண்டில் | 01 |
| 21. | B/131/12 | வண்டில் | 01 |
| 22. | 14111/F/11 | வண்டில் | 01 |
| 23. | 17538/F | வண்டில் | 01 |
| 24. | 20480/F/13 | வண்டில் | 01 |
| 25. | 26136/F/14 | வண்டில் | 01 |
| 26. | 24299/F/ 14 | 01. வண்டில் | 01 |
| | | 02. வண்டில் | 01 |
| | | 03. வண்டில் | 01 |
| | | 04. வண்டில் | 01 |
| | | 05. வண்டில் | 01 |
| | | 06. வண்டில் | 01 |
| | | 07. வண்டில் | 01 |
| | | 08. வண்டில் (சேதம் அடைந்தது) | 01 |
| 27. | 22701/F / 13 | பல்கேரியா இயந்திரம் | 01 |
| 28. | 13418/ Pc/10 | 500 l பிளாஸ்ரிக் தண்ணீர் தாங்கி | 01 |
| 29. | வழக்கு இலக்கம் இல்லை | 500 l பிளாஸ்ரிக் தண்ணீர் தாங்கி | 01 |
| 30. | 20736/ PC/13 | காதணி | 01 |
| 31. | 20736 /PC/ 13 | காதணி | 01 |
| 32. | 18049/PC | சவள் | 02 |
| 33. | 13074/PC | சவள் | 03 |
| | | மண்வெட்டி | 01 |
| 34. | 17875/PC | மண்வெட்டி | 01 |
| | | வாளி | 01 |
| 35. | 18156/PC | சவள் | 02 |
| | | மண்வெட்டி | 02 |
| 36. | 1239/PC | சவள் | 04 |
| | | மண்வெட்டி | 03 |
| 37. | 1244/PC | சவள் | 02 |
| | | வாளி | 01 |

| வழக்கு இல. | சான்றுப் பொருட்கள் தொடர்பான விபரம் | எண்ணிக்கை |
|---|---|---|
| 38. 11832/PC | சவள் | 02 |
| | மண்வெட்டி | 02 |
| 39. 18935/PC | மண்வெட்டி | 01 |
| 40. 18183/PC | மண்வெட்டி | 01 |
| | வாளி | 01 |
| 41. 18857/PC | சவள் | 02 |
| | மண்வெட்டி | 03 |
| | வாளி | 02 |
| 42. 17874/PC | மண்வெட்டி | 01 |
| | வாளி | 01 |
| 43. 1216/PC | சவள் | 01 |
| | மண்வெட்டி | 01 |
| 44. 11958/PC | மண்வெட்டி | 01 |
| | வாளி | 01 |
| 45. 1306/PC | சவள் | 03 |
| | வாளி | 03 |
| 46. 869/PC | சவள் | 01 |
| | மண்வெட்டி | 02 |
| 47. 26911/PC | கத்தி | 01 |
| 48. 26910/PC | கைவாள் | 01 |
| | சுத்தியல் | 01 |
| 49. 26909/PC | மண்வெட்டி | 01 |
| 50. 11629/PC | மண்வெட்டி | 01 |
| | வாளி | 01 |
| 51. 17047/PC | சவள் | 02 |
| | மண்வெட்டி | 01 |
| 52. 22563/PC | கோடரி | 01 |
| 53. 18373/PC | கத்தி | 01 |
| 54. 22564/PC | கோடரி | 01 |
| 55. 22820/PC | குறுக்குவாள் | 01 |
| 56. 22818/PC | குறுக்குவாள் | 01 |
| 57. 17071/PC | கத்தி | 01 |
| 58. 15414/PC | கத்தி | 01 |
| 59. AR/16/15 | 12 A பற்றரி | 02 |
| 60. 22409/PC | சவள் | 03 |
| | மண்வெட்டி | 01 |
| 61. 22825/F | கோடரி | 01 |
| 62. 23877/F | கோடரி | 01 |
| 63. 23879/F | கத்தி | 01 |
| 64. 23880/F | கோடரி | 01 |
| 65. 23881/PC | கத்தி | 01 |
| 66. 18050/PC | மண்வெட்டி | 01 |
| 67. 15512/F | கோடரி | 01 |
| 68. 15510/F | கோடரி | 01 |
| 69. 19858/F | கோடரி | 01 |
| 70. 19874/F | மண்வெட்டி | 01 |
| | வாளி | 01 |
| 71. 19859/F | கோடரி | 01 |
| 72. 19857/F | கோடரி | 01 |
| 73. 11960/ PC | மண்வெட்டி | 02 |
| 74. 15373/PC | சவள் | 01 |
| | மண்வெட்டி | 01 |
| 75. 15629/PC | சவள் | 02 |
| | மண்வெட்டி | 03 |
| 76. 28237/Misc | தராசு | 01 |
| 77. 27015/ Misc | தராசு | 01 |
| 78. 26005/Misc | தராசு | 01 |
| 79. 24724/PC | தராசு | 01 |
| 80. 24723/PC | தராசு | 01 |
| 81. 24732/PC | தராசு | 01 |
| 82. 24586/PC | தராசு | 01 |
| 83. 23641/PC | தராசு | 01 |
| 84. 23525/PC | தராசு | 01 |
| 85. 23155/PC | தராசு | 01 |
| 86. 23239/PC | தராசு | 01 |
| 87. 23154/PC | தராசு | 01 |
| 88. 23020/PC | தராசு | 01 |
| 89. 23003/PC | தராசு | 01 |
| 90. 22914/PC | தராசு | 01 |
| 91. 22617/PC | தராசு | 01 |
| 92. 22606/PC | தராசு | 01 |
| 93. 22727/PC | தராசு | 01 |
| 94. 23079/PC | தராசு | 01 |
| 95. 1464/F | கோடரி | 01 |
| 96. 19191/PC | சவள் | 03 |
| | மண்வெட்டி | 01 |
| 97. 19640/PC | மண்வெட்டி | 01 |
| 98. 17856/PC | சவள் | 01 |
| 99. 16761/PC | கோடரி | 01 |
| 100. 17857/PC | சவள் | 01 |
| 101. 22701/F | 1. மின்சார சீவிளி | 01 |
| | 2. மின்சார கிரைண்டர் | 01 |
| | 3. மின்சார றில்லர் | 01 |
| | 4. மின்சார ரௌடர் | 01 |
| | 5. சுத்தியல் | 02 |
| | 6. ஸ்கூட்றைவர் | 02 |
| 102. இலக்கம் இல்லை | | |
| | 1. அலுமினியம் பானை | 05 |
| | 2. அலுமினியம் சட்டி | 05 |

3-467

# உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள்

## அறிவித்தல்

*2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(2) ஆம் பிரிவின்கீழ் கார்டா பெஷன்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட் அதன் பெயரை இமேஜின் டிசைன் ஸ்ரூடியோ ( பிறைவேட்) லிமிட்டெட் என மேற் கூறப்பட்ட சட்டத்தின் 8 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கு அமைவாக மாற்றம் செய்துள்ளது எனவும் அறிவிக்கப்படுகின்றது :-*

*கம்பனியின் முன்னைய பெயர்* : கார்டா பெஷன்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்
*பதிவிலக்கம்* : பீவீ 95562

*பதிவு முகவரி* : இல. 18/04, தல்வத்த, கோனவல, களனி
*கம்பனியின் புதிய பெயர்* : இமேஜின் டிசைன் ஸ்ரூடியோ (பிறைவேட்) லிமிட்டெட்.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

கோப்பரேட் சர்விஸஸ் (பிறைவேட்) லிமிட்டெட்
செயலாளர்கள்.

இமேஜின் டிசைன் ஸ்ரூடியோ (பிறைவேட்) லிமிட்டெட்.

3-389

## அறிவித்தல்

*2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின்கீழ் பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-*

*கம்பனியின் பெயர்* : ஏசீ புறொன்ட் லைன் செகுரிடீ சொலு சன் (பிறைவேட்) லிமிட்டெட்
*பதிவிலக்கம்* : பீவீ 111861
*கூட்டிணைப்புத் திகதி* : 2016.02.12

*பதிவு முகவரி* : இல. 150/20 , முதலாம் ஒழுங்கை, கும்புக்கற தூவ, பாராளுமன்ற வீதி, கோட்டை.

கம்பனிச் செயலாளர்.

*2016, மாச்சு 01.*

3-390

## அறிவித்தல்

63/5, வார்ட் பிளேஜ், கொழும்பு 7 எனும் முகவரியில் பதிவு செய்யப்பட்ட வரையறுக்கப்பட்ட ருமாஸல்லா(தனியார்) கம்பனியானது (பிவி 111785) 2016, பெப்புருவரி 09 ஆந் திகதியன்று கூட்டிணைக்கப்பட்டது என்பதனை 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9 (1) இற்கமைவாக இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-

ருமாஸல்லா (தனியார் ) கம்பனி,
கம்பனிச் செயலாளர்.

3-469

## அறிவித்தல்

*2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின்கீழ் பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டதாக இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-*

*கம்பனியின் பெயர்* : மேஜ் இவென்ட்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்
*பதிவிலக்கம்* : பீவீ 111977

*பதிவு முகவரி* : இல. 50, ஸ்கூன் லேன், ஓப் ஸ்டேசன் வீதி, தெஹிவளை
*கூட்டிணைக்கப்பட்ட திகதி* : 2016.02.18

மறேஸ் திவங்க அமரசிங்க,
யுஸ்டின் ஜெசிகா லோட்.
பணிப்பாளர்கள்,

3-475

## பொது அறிவித்தல்

*2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9 (1)ஆம் பிரிவிற்கேற்ப பபசர இன்வெஸ்ற்மென்ற்ஸ்( பிறைவேட்) லிமிட்டெட், 2016 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 12 ஆம் திகதி கூட்டிணைக்கப் பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-*

*கம்பனியின் பெயர்* : பபசர இன்வெஸ்ற்மென்ற்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்
*கூட்டிணைப்புத் திகதி* : 2016.02.12
*கம்பனியின் இல.* : பீவீ 111811
*பதிவு செய்யப்பட்ட அலுவலகம்* : இல. 206/3, ஹைவே ஓட்டோ என்ஜினியர் , கபல்லகொட, ஹொரணை.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி

P.E. சம்பிக றொட்ரிகோ,
கம்பனிச் செயலாளர்.

0772205557

3-487

## அறிவித்தல்

*2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின் கீழ் பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென அறிவிக்கப்படுகின்றது :-*

*கம்பனியின் பெயர்* : லங்கா எபக்ஸ் மனேஜ்மன்ட் (பிறைவேட்) லிமிட்டெட்
*பதிவிலக்கம்* : பீவீ 111451
*பதிவு செய்யப்பட்ட அலுவலகம்* : இல. 21/1, கருணாதிலக பிளேஸ், கொலன்னாவ.

கம்பனிச் செயலாளர்.

3-489

**அறிவித்தல்**

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9 ஆம் பிரிவின் கீழ், பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-

கம்பனியின் பெயர் : ஸ்கிரீன்லைன் இமேஜிங் (பிறைவேட்) லிமிட்டெட்
கம்பனியின் இல. : பீவீ 111623
கூட்டிணைப்புத் திகதி : 2016.02.02
பதிவு முகவரி : இல. 18/4, தெல்வத்த, கோணவல, களனி.

பணிப்பாளர் சபையின் கட்டளைப் பிரகாரம்,

எப். ஜே. என்ட் ஜீ. டீ. சேரம்,
வழக்கறிஞர்.

3-498

**அறிவித்தல்**

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9 (1)ஆம் பிரிவின் கீழ், பின்வரும் கம்பனிகள் கூட்டிணைக்கப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-

கம்பனியின் பெயர் : லெயிடன் இன்ரநெஷனல் (பிறைவேட்) லிமிட்டெட்
கம்பனியின் பதிவு இல. : பீவி 111994
கூட்டிணைப்புத் திகதி : 2016, பெப்புருவரி 18
பதிவு முகவரி : 45, மல்வத்த வீதி, தெஹிவளை.

கம்பனியின் பெயர் : ஆர். எம். ஐ. ஹோல்டிங்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்
கம்பனியின் பதிவு இல. : பீவி 112134
கூட்டிணைப்புத் திகதி : 2016, மாச்சு 01
பதிவு முகவரி : 127/1, திம்பிரிகஸ்யாய வீதி, கொழும்பு 5.

பினான்சியல் அன்ட் பிசினஸ் அசோசியேட்ஸ்
(பிறைவேட்) லிமிட்டெட்,
கம்பனிச் செயலாளர்கள்.

3-505

**அறிவித்தல்**

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின் கீழ, கீழ்வரும் கம்பனியின் பெயர் பின்வருமாறு மாற்றப் பட்டுள்ளது :-

கம்பனியின் பெயர் : டி.பி.ஜி. மெனேஜ்மன்ட் சர்விஸ் (பிறைவேட்) லிமிட்டெட்
கம்பனியின் பதிவிலக்கம் : பிவி 106141

கம்பனியின் பதிவு முகவரி : 33 ஆவது மாடி, உலக வர்த்தக நிலையம், எச்சலன் சதுக்கம், கொழும்பு 1
கம்பனியின் புதிய பெயர் : ப்ளூஸ்டோன் மெனேஜ்மன்ட் (பிறைவேட்) லிமிட்டெட்
பெயர் மாற்றம் செய்த திகதி : 2016, பெப்புருவரி 12.

பணிப்பாளர்.

3-517

**அறிவித்தல்**

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9 (1)ஆம் பிரிவின் கீழ், கீழ்வரும் கம்பனி பின்வருமாறு கூட்டிணைக்கப் பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-

கம்பனியின் பெயர் : Zசெப்டோலிடிக்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்
கம்பனியின் பதிவிலக்கம் : பிவி 111928
கம்பனி பதிவு முகவரி : இல. 12/1, பெட்ரிஸ் ரோட், கொழும்பு 03
கூட்டிணைப்புத் திகதி : 2016 , பெப்புருவரி மாதம் 17

பணிப்பாளர்.

3-518

**அறிவித்தல்**

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9 (1)ஆம் பிரிவின் கீழ், கீழ்வரும் கம்பனியானது 2016ஆம் ஆண்டு மாசி மாதம் 19 ஆந் திகதி பதிவுசெய்யப்பட்டுள்ளது :-

கம்பனியின் பெயர் : லைட் என்ஜினியரிங் என்டபிரைசஸ் (பிறைவேட்) லிமிட்டெட்
கம்பனியின் பதிவிலக்கம் : பீவீ 112007
கம்பனி பதிவு முகவரி : இல. 54, லில்லி அவனியு, கொழும்பு 06

டீஸ் மெனேஜ்மன்ட் கொன்சல்டன்ஸ்
மற்றும் சென்னரட்டேரியல் சேர்விசஸ்
( பிறைவேட்) லிமிட்டெட்.
செயலாளர்கள்.

3-521

**பொது அறிவித்தல்**

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9 (1)ஆம் பிரிவின் கீழான அறிவித்தல் :-

கம்பனியின் பெயர் : பதுரிய டிஸ்டிபியூட்டர்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்
கம்பனியின் பதிவிலக்கம் : பிவி 66100
கூட்டிணைப்புத் திகதி : 2008, நவெம்பர் 6
பதிவு அலுவலகம் : இல. 192, ஹேமபால முனிதாச மாவத்தை, வெலிமடை.

சார் பிஸ்னெஸ் சிஸ்டம்ஸ்
( பிறைவேட்) லிமிட்டெட்,
கம்பனிச் செயலாளர்கள்.

இல. 141/3, வொக்ஷால் ஒழுங்கை,
கொழும்பு 02.

3-522

### பொது அறிவித்தல்

*2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டம் 9 (1)ஆம் பிரிவின் கீழ், பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென அறிவிக்கப் படுகின்றது :-*

*கம்பனியின் பெயர் : பெத்தல் இன் ஹபரண*
*கம்பனியின் பதிவிலக்கம் : ஜிஏ 3150*
*கூட்டிணைக்கப்பட்ட திகதி : 2016.02.19*
*பதிவு முகவரி : இல. திருகோணமலை வீதி, ஹபரண.*

*3-536*

---

### அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

*ராஜகிரிய, இல. 5, 2 ஆம் ஒழுங்கை, கொஸ்வத்த ரோட், நாவல என்ற முகவரியில் வதியும் லியனகே லீலாவதீ பெரேரா( தே.அ.அ.இல. 436520778 V) இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசுக்கும், பொது மக்களுக்கும் இத்தால் அறிவித்துக் கொள்வது, கொழும்பு பிரசித்த நொத்தாரிசு என். ஆர். சேனசிங்க என்பவரால் அத்தாட்சிப் படுத்தப்பட்டு, அஹங்கம விதான ஆரச்சிகே தீபால் ரூஷாந்த என்பவரை எனது சட்டரீதியான அற்றோணியாக நியமித்துஅவருக்கு வழங்கப்பட்ட 1259 இலக்கத்தையுடைய 2013.06.20 ஆந் திகதியிடப்பட்ட அற்றோணித் தத்துவம் இரத்துச் செய்யப்பட்டு இல்லாதொழிக்கப்பட்டது என்பதாகும்.*

*3- 519*

---

### அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

*இத்தால் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசுக்கும் பொது மக்களுக்கும் அறியத்தருவதாவது, பிரசித்த நொத்தாரிசு R.W.M. அஜந்தி வனசிங்க முகதாவில் 2014.01.30 ஆந் திகதி 406 ஆம் இலக்கத்தில் கஸ்தூரி ரத்ன தென்னக்கோன் அப்புகாமிலாகே ரன்ஜித் கஸ்தூரி ரத்ன மறுபெயர் ரன்ஜித் கஸ்தூரி ரத்ன என்பவரின் பெயரில் இல. 18/12/C, சமகி மாவத்தை, கம்பஹா வீதி, யக்கல யைச் சேர்ந்த கஸ்தூரி ரத்ன தென்னக்கோன் அப்புகாமிலாகே சன்ன காமினி கஸ்தூரி ரத்ன ஆகிய என்னால் நிறைவேற்றப்பட்ட அற்றோணி தத்துவப்பத்திரம் ( பதிவு திகதி 2014.02.28 Day Book No. 20207, Volume/ Folio 34/40) இன்று முதல் மீளப்பெறப்படுவதோடு இரத்தும் செய்யப்படுகின்றது. இன்று முதல் அற்றோணி தத்துவக்காரர்களால் மேற்குறிப்பிட்ட அற்றோணித் தத்துவப்பத்திரத்தின் கீழ் மேற்கொள்ளப்படும் எந்தவொரு செயலுக்கும் நடவடிக்கைக்கும் நான் பொறுப்பாக மாட்டேன்.*

*கஸ்தூரி ரத்ன தென்னக்கோன்,*
*அப்புகாமிலாகே சன்ன காமினி கஸ்தூரி ரத்ன,*

*3- 545*

---

### அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசுக்கும் பொது மக்களுக்கும் இத்தால் அறிவித்துக்கொள்வது, 2015.05.20 அன்று பிரசித்த நொத்தாரிஸ் விக்ரம ஸாகரிக்கா மல்காந்தி என்பவரால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட முல்லேகம, இலக்கம் 93/05, அம்பதென்ன, எம். ஜீ. ஜனக சுமேத என்பவருக்கு மஹியங்கனை, இலக்கம் 158/80 , சொரபொர ஜனபதயவில் வதியும் பிவீ அஜித் குமாரசிங்ஹ ஆகிய என்னால் வழங்கப்பட்ட அற்றோணித்தத்துவம் 2016.02.26 ஆந் திகதி முதல் இரத்துச் செய்யப்பட்டது என்பதாகும். இத்தினம் முதல் அற்றோணித்தத்துவகாரரினால் மேலே குறிப்பிடப்பட்ட தத்துவத்தை உபயோகித்து மேற்கொள்ளப்படும் எந்தவொரு செயற்பாட்டுக்கும் அல்லது நடவடிக்கைக்கும் நான் பொறுப்பாக இருக்க மாட்டேன்.*

*பிபீ அஜித் குமார சிங்ஹ,*

*2016.02.26*

*3-417*

---

### அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் குருநாகல் மாவட்டத்தில் நக்காவத்த முகவரியில் நக்காவத்தயை வதிவிடமாகவும் கொண்ட ஜெராடி ஆச் போல்ட் சந்ர குப்த கன்னங்கர விஜேகோன் அபேசிங்ஹ ஆகிய நான், குருநாகல் பிரசித்த நொத்தாரிசு திரு. சம்பிக லசித குமார என்பவரால் எழுதி உறுதிப்படுத்தப்பட்ட 2809 ஆம் இலக்கத்தின் 2014.02.15 ஆந் திகதியிடப்பட்ட அற்றோணி அனுமதிப்பத்திரத்தின் மூலம் மேற்குறிப்பிடப்பட்ட நக்காவத்தை முகவரியில் வதிவிடமாகக் கொண்ட ஜாலிய ரோஹண ஏர்னஸ்ட் கன்னங்கர விஜேகோன் அபேசிங்ஹ என்பவருக்கு வழங்கியிருந்த அற்றோணி அதிகாரம் இன்று முதல் இரத்துச் செய்து வலுவிலக்கச் செய்துள்ளதாக மேன்மைதகு இலங்கை அரசின் அனைத்து பொதுமக்களுக்கும் இத்தால் அறியத் தருகிறேன்.*

*3- 420*

---

## ஏல விற்பனைகள்

### டீஎப்சீசீ வங்கி பீஎல்சீ

*(முன்னர் வரையறுக்கப்பட்ட டீஎப்சீசீ வங்கி என அழைக்கப்பட்டது)*

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 8ஆம் பிரிவின் கீழான விற்பனை*

**பெறுமதிமிக்க சொத்து ஏல விற்பனை**

***433 ஆம் இலக்க பிணை உறுதி மூலம் அடகு வைக்கப்பட்ட உடைமைகளின் விபரம்***

***கிழக்கு மாகாணம், மட்டக்களப்பு மாவட்டம், மண்முனை வடக்கு பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட , பெரிய உபபோடை கிராம அலுவலர் பிரிவில், மண்முனைப் பற்று, மட்டக்களப்பு மாநகர சபை எல்லைகளுக்கு உட்பட்ட 8 ஆம் வட்டாரத்தில் அமைந்துள்ள இல.***

**50, பாக்கியம் ஒழுங்கை, சீலாமுனை கிராமம் என்ற முகவரியில் அமைந்துள்ள அனுமதிப்பத்திரம்பெற்ற நிலஅளவையாளர் ஏ.ஈ. கே. திஸ்ஸவெரசிங்க அவர்களால் வரையப்பட்ட 2013 ஆம் ஆண்டு சனவரி மாதம் 14 ஆந் திகதியிடப்பட்ட 15/2013 ஆம் இலக்க வரைபடத்தில் துண்டு 01 எனக் குறிப்பிடப்பட்டுள்ள பிரிக்கப் பட்டதும், வரையறுக்கப்பட்டதுமான காணித்துண்டு**

**(காணியின் விஸ்தீரணம் : 0ஏ. 0றூ. 16.33பே.) (0.0413 ஹெக்டேயர்)**

அதிலுள்ள கட்டடங்கள், கிணறு மற்றும் அதற்கு உரித்தான அனைத்தும் அடங்கலாக,

மட்டக்களப்பு பிரசித்த நொத்தாரிசு ஆர். காயத்திரி அவர்களால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2013 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 27ஆம் திகதியிடப்பட்ட 433 ஆம் இலக்க பிணை உறுதி மூலம் மட்டக்களப்பில் வசிக்கும் பொன்னுத்துரை சுதாஹரன் எனவும், பொன்னுத்துரை சுதாகரன் மற்றும் நடராசா வாசுகி எனவும் வாசுகி சுதாகரன் எனவும் ( இதன் பின்னர் "இணைந்து கடன்படுநர்" என அழைக்கப்படும்) நடராசா அவர்களால் டீஎப்சீசீ வங்கி பீஎல்சீ க்கு அடகுவைக்கப்பட்டு மீட்கப்படாத சொத்து டீஎப்சீசீ வங்கியினால் எமக்களிக்கப்பட்ட அதிகாரத்தின் படி 2016ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 07 ஆந் திகதி வியாழக்கிழமை மு. ப. 11.00 மணிக்கு எம்மால் ஸ்தலத்தில் பகிரங்க ஏல விற்பனைக்கு விடப்படும்.

**கொடுப்பனவு செய்யும் முறை.-** ஏலவிற்பனையில் வெற்றிபெற்ற கொள்வனவாளர், விற்பனையின் முடிவில் பின்வரும் தொகைகளை ரொக்கப் பணமாகச் செலுத்த வேண்டும் :-

(1) கொள்வனவு செய்யப்பட்ட விலையின் 10% (பத்து சதவீதம்) ;

(2) உள்ளூர் அதிகார சபைக்குச் செலுத்தப்படவேண்டிய விற்பனை வரி 1% (ஒரு சதவீதம்) ;

(3) விற்பனை விலையில் ஏலதாரர் தரகு 2.5% (இரண்டரை சதவீதம்) ;

(4) மொத்த விளம்பரச் செலவு 1,22,000 ரூபா ;

(5) எழுதுவினைஞர் மற்றும் ஏலம் கூறுவோர் கட்டணம் 500 ரூபா;

(6) விற்பனை நிபந்தனைகளுக்கான நொத்தாரிசுக் கட்டணம் 2,000 ரூபா.

கொள்முதல் விலையின் மிகுதி 90% விற்பனையின் பின்னர் 30 நாட்களுக்குள் சட்ட ரீதியான விதிப்பனவுகள், தீர்வைகள், வரிகள் அல்லது இலங்கை அரசாங்கத்தினால் அல்லது வேறு ஏதாவது அதிகார சபையினால் அவ்வப்போது விதிக்கப்படுகின்ற கட்டணங்களுடன் சேர்த்து செலுத்தப்படல் வேண்டும்.

**மேலதிக விபரங்களுக்கு.-** 011-2371371 என்னும் தொலைபேசி இலக்கம் மூலம் டீஎப்சீசீ வங்கியின் சட்டப் பிரிவுடன் தொடர்பு கொள்ளவும்.

'முன்னறிவித்தலின்றி ஏலவிற்பனையை நிறுத்தும்/இரத்துச் செய்யும் அதிகாரம் வங்கிக்குள்ளது.'

சொக்மன் அன்ட் சமரவிக்ரம,
ஒரே நாடு, ஒரே ஏலவிற்பனையாளர்,
124 வருடகால மகோன்னத சேவை.

| தலைமை அலுவலகம் : | நகர அலுவலகமும் காட்சியறையும்: |
|---|---|
| 24, டொரிங்டன் வீதி, கண்டி. | 290, ஹவ்லொக் றோட், கொழும்பு 5. |
| தொலைபேசி : 081-2227593 | தொலைபேசி : 011-2502680, 011-2585408 |
| தொ.பே./ ஃபக்ஸ் : 081-2224371 | தொ.பே./ ஃபக்ஸ் : 011-2588176 |
| மின்-அஞ்சல் : schokmankandy@sltnet.lk | மின்-அஞ்சல் : schokman@samera1892.com |

இணையத்தளம் : www.sandslanka.com

3-428

---

**செலான் வங்கி பீஎல்சீ - கொழும்பு கோட்டை கிளை**

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் சட்டத்தின் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழான விற்பனை

**ஏல விற்பனை**

"கடன்பட்டோர்" என்ற வகையில் கொழும்பு பதிவு அலுவலகத்தில், பதிவு இல. பிவி 21298 இன் கீழ் பதிவுசெய்யப்பட்ட 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் கீழ் ஒழுங்காகக் கூட்டிணைக்கப்பட்டுள்ள ஒரு கம்பனியாகிய ஷான் டிரவல்ஸ் என்ட் டுவர்ஸ் ( பிறைவேட்) லிமிட்டெட்டுக்கு வழங்கப்பட்ட வசதிகளுக்காக செலான் வங்கி பி எல் சிக்கு ஈடு வைக்கப்பட்ட சொத்து

மேல் மாகாணம் கொழும்பு மாவட்டத்திலுள்ள கொழும்பு மாநகர சபை எல்லைக்குட்பட்ட கிரேன்பாஸ் வேல்ஸ் குமார மாவத்தையில், வரிமதிப்பீட்டு இல. 606 , ஸ்ரீ மாவோ பண்டாரநாயக்க மாவத்தையில் அமைந்துள்ள காணி அனுமதிபெற்ற நிலஅளவையாளர் எம். டபிள்யூ. டீ. எஸ். சில்வா என்பவரினால் தயாரிக்கப்பட்ட 1995.10.14 ஆந் திகதியிடப்பட்ட நிலவரைபட இல. 3044 இல் துண்டு 1 அங்கு காணப்படுகின்ற கட்டிடங்கள், மரங்கள், பயிர்த்தோட்டங்கள் மற்றும் அனைத்துடன் சகலதும் பிரிக்கப்பட்டு அடையாளமிடப்பட்டுள்ள காணி ஐந்து தசம் சைபர் நாலு பேர்ச்சு ( 0ஏ.0றூ.5.04பே.) விஸ்தீரணத்தைக் கொண்டுள்ளது.

மேலே விவரிக்கப்பட்டுள்ள சொத்தை 2016 , ஏப்பிறல் 04 ஆந் திகதி மு.ப 10.30 மணிக்கு அதே இடத்தில் பகிரங்க ஏலம் மூலம் என்னால் விற்பனை செய்யப்படும்.

**காணியை சென்றடைகின்ற விதம்.-** கொழும்பு கோட்டையிலிருந்து ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க வீதிவரை சென்று, கிரான்ட்பாஸ் போக்குவரத்து விளக்கு சந்தி ( இங்குறு கடை சந்தி) கடந்து 50 மீற்றர் வரை சென்றால் மேற்கூறப்பட்ட வீதியில் வரிமதிப்பீட்டு இல. 606 இல் வீதியின் வலது கைப்பக்கத்தில் குறிப்பிட்ட சொத்து அமைந்திருக்கும்.

**தீர்மானம் பற்றிய அறிவித்தலுக்காக.-** 2016.01.22 ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானியையும், 2016.01.15 ஆந் திகதிய "டெயிலி மிரர்" மற்றும் "லங்காதீப" பத்திரிகைகளையும் மற்றும் 2016.01.14 ஆந் திகதிய "தினக்குரல்" பத்திரிகையையும் பார்க்கவும்.

**கொடுப்பனவு செய்யும் விதம்.-**வெற்றிபெற்ற கொள்வனவாளர் ஏல விற்பனை முடிவில் பின்வரும் கட்டணங்களை பணமாக ஏலதாரருக்கு செலுத்த வேண்டும்:-

(1) கொள்வனவு விலையில் பத்து வீதம் 10% ;

(2) உள்ளூர் அதிகார சபைக்கான உள்ளூர் விற்பனை வரி அத்துடன் உள்ளூர் அதிகார சபைக்கு உள்ளூர் விற்பனை வரி ( ஒரு வீதத்திற்குப் பதிலாக ) அரசினால் அல்லது உள்ளூர் அதிகார சபையினால் விதிக்கப்பட்ட வேறு ஏனைய வரி ;

(3) ஏலவிற்பனையாளர் கட்டணமாக இரண்டரை வீதம் 2.5% ;

(4) விற்பனை நிபந்தனைகளுக்கான நொத்தாரிசு உறுதிப் படுத்தல் கட்டணம் 2,000 ரூபா ;

(5) இலிகிதர் மற்றும் கூவுவோர் வேதனங்கள் 500 ரூபா ;

விற்பனையின் பேரில் செலவிடப்பட்ட மொத்த விளம்பரச் செலவு மற்றும் கொள்வனவு விலையின் மிகுதி 90%விற்பனைத் திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் செலான் வங்கி பீஎல்சி யில் வைப்புச்செய்யப்படல் வேண்டும். மேற்கூறப்பட்ட நிபந்தனைகளுக்கேற்ப மிகுதித் தொகை 30 நாட்களுக்குள் வைப்புச் செய்யப்படாவிடில் முன் வைப்புச் செய்த தொகையில் 10% கழிவு தள்ளுபடி செய்து மீள் விற்பனை செய்ய வங்கிக்கு முழு உரித்துடையது.

''மேற்படி ஏல விற்பனையை வங்கியினால் முன்னறிவித்தலின்றி ரத்துச் செய்யவும் இடைநிறுத்தவும் முடியும்''

ரி அன்ட் எச் ஒக்சன்,
இல. 50/3, விஹார மாவத்தை,
கொலன்னாவ.
தொலைபேசி: -0113068185, 2572940

துசித்த கருணாரத்ன (ச.நீ),
அனுமதிபெற்ற ஏலதாரர், நீதிமன்ற ஆணையாளர்.

3-495